# சபை குரு மடல்...

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை,
உன்னைக் கைவிடுவதுமில்லை
எபிரெயர் 13:05

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் திருச்சபை மக்களனைவருக்கும் வாழ்த்துக்கள். மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியமானது யெகோவாவாகிய ஆண்டவர் யோசுவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்தமாகும். இதை எபிரெயருக்கு எழுதிய ஆக்கியோன் எடுத்துப் பயன்படுத்தியுள்ளார். தேவனுடைய மனுஷனாகிய மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தியபோது ஆண்டவர் கூடவே இருந்தார். எனவே மக்களுக்கு எது தேவையோ எப்பொழுது தேவையோ அவைகளை ஒன்றும் குறைவில்லாமல் மிக சிறப்பாக வழி நடத்தினார். மோசேயின் மரணத்திற்கு பின் யோசுவா மிகவும் கலங்கினார். ஏனெனில் ஆண்டவர் கூட இல்லையெனில் இவைகள் சாத்தியமாகாது என்றும் எண்ணினார். அப்போது மேலே குறிப்பிட்ட வாக்குத்தத்தத்தின் வாயிலாக அவரை திடப்படுத்தினார். குறைவின்றி வழி நடத்தவும் செய்தார். எபிரெயருக்கு எழுதிய ஆக்கியோனின் காலத்தில் விசுவாசம் குறைந்த படியினால் நாளையை குறித்த கவலை விசுவாசிகள் மத்தியில் நிலவி வந்தது. எனவே, பொருளாசை, திரளாக சேமிக்கின்ற எண்ணம், லௌகிக கவலை நிறைந்தவர்களாய், கடவுள் நம்பிக்கையில் குறைவுபட்டவர்களாயினர். எனவேதான் கடவுளின் வாக்கை நினைவு படுத்தி அவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்த முயற்சி செய்தார். கடவுள் நம்மோடு இருக்கும் போது குறைவின்றி வழி நடத்துவது மட்டுமல்ல கடைசிவரை கைவிடாமலுமிருப்பார் என்ற உண்மையை அவர் மக்களுக்கு தெளிவாக அறிவித்தார். ஆண்டவர் நம்மை விட்டு விலகவுமாட்டார், நம்மை கை விடவும் மாட்டார் என்ற உண்மையை உணர்ந்து அவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள ஆண்டவர் அருள்புரிவாராக.

இப்படிக்கு
ஆண்டவரின் அருட்பணியில்
**அருள்திரு. P. ஆபிரகாம்**